**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்ற சாதாரணக்கூட்டம்**
**நாள். 27.09.2023 புதன்கிழமை நேரம் – காலை 10.00 மணி**

---

**மன்றப்பொருள்–1**

உசிலம்பட்டி நகராட்சியின் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக வரப்பெறும் விண்ணப்பங்களுக்கு சொத்துமதிப்பு பத்திரப்பதிவு அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1). சொத்துமதிப்பு கிரையம் பத்திரப்பதிவில் முதல் ரூ. 1.00 இலட்சத்திற்கு கட்டணம் ரூ.100/–

2). சொத்துமதிப்பில் முதல் ரூ. 1.00 இலட்சம் நீங்கலாக அடுத்து வரும் ஒவ்வொரு ரூ.50,000/–க்கும் கட்டணம் ரூ. 50/– வீதம்.

3). பாகப்பிரிவினை செட்டில்மெண்ட் பதிவு பத்திரம் விண்ணப்பக்கட்டணம் ரூ.300/–

4).உயில் சாசனம் பதிவு பத்திரம் விண்ணப்பக்கட்டணம் ரூ. 300/–

5).குடிநீர் குழாய் பெயர் மாற்ற விண்ணப்பக்கட்டணம் ரூ.100/–

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1775/2021/அ1)

**தீர்மானம் எண்.525**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–2**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 தொடர்பான பயிற்சி கலைவாணர் அரங்கம் சென்னையில் நடைபெற்றதற்கு இரண்டாம் நிலை நகராட்சிக்கு ரூ.5000/– செலுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 12091/2023/எம்ஏ2, நாள். 09.08.2023–இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ. 5000/– நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அலுவலக வங்கி கணக்கில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1135/2023/சி1)

**தீர்மானம் எண்.526**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–3**

இந்நகராட்சியில் பேருந்து நிலையத்தில் உள்ள கடை உரிமதாரர்கள் நகராட்சி நிர்வாகத்திற்கு எதிராக W.P.(MD) No. 9250, 9252, 9254, 9261, 9255, 9257, 9263, 9266, 9269, 9272, 9258, 9268, 9262, 9270, 9264, 9271, 9286, 9288, 9295, 9296, 9297, 9299, 9253, 9259, 9277, 9278, 9302, 9304, 9256, 9260, 9265, 9267, 9273, 9274/2023) ஆகிய 34 வழக்குகளுக்கு நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு உரிய செலவினம் ரூ. 3,40,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து திரு.ஆஸ்டின் நிலை வழக்கறிஞருக்கு வழங்கலாம் மன்ற அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 808/2023/அ1)

**தீர்மானம் எண்.527**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–4**

இந்நகராட்சி பேருந்து நிலைய கடைகள் தொடர்பான வழக்கு எண். W.P.(MD) No. 43367, 14304, 12108/2023 ஆகிய வழக்கு எண் திரு. பிரதீப் என்பவரால் தொடரப்பட்ட வழக்கிற்கு நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு வழக்காடு கட்டணம் ரூ. 30,000/– திரு. ஆஸ்டின் வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2).நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 193/2023/அ1)

**தீர்மானம் எண்.528**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–5**

இந்நகராட்சி பேருந்து நிலைய கடை வியாபாரிகள் நலச்சங்கத்தில் இருந்து கொரோனா நோய்த்தொற்று காலத்தில் கடைகள் இயங்காமல் இருந்ததால் மூன்று மாத வாடகையினை தள்ளுபடி செய்யக்கோரி வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கிற்கு W.P.(MD) No. 22157/2023–ற்கு எதிர்வாதுரை தாக்கல் செய்தமைக்குரிய வழக்கு கட்டணம் ரூ. 10,000/–(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) திரு. கே. மகேந்திரன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2434/2021/அ1)

**தீர்மானம் எண்.529**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–6**

இந்நகராட்சி கவண்டன்பட்டி சாலை இன்பவள்ளி மற்றும் தமிழரசி என்பவர் சாலை வசதி செய்துதரக்கோரி பாதை தொடர்பாக வழக்கு எண். 21108/2023–ற்கு திரு. ஆஸ்டின் வழக்கறிஞர் ஆஜராகி வாதாடுவதற்கும் எதிர்வாதுரை தாக்கல் செய்வதற்கும் உரிய வழக்கு கட்டணம் ரூ. 10,000/– மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1370/2023/அ1)

**தீர்மானம் எண்.530**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–7**

இந்நகராட்சி வார்டு எண்.3, வத்தலக்குண்டு ரோட்டில் திரு. வீ. பால்ச்சாமி என்பவர் ஆக்கிரமிப்பு தொடர்பாக வழக்கு எண். 648/2023–இல் ஆஜராகி வாதாடியமைக்கும், எதிர்வாதுரை தாக்கல் செய்தமைக்கும் உரிய வழக்கு கட்டணம் ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளார். அன்னாருக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1369/2023/எப்.1)

**தீர்மானம் எண்.531**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-8</u>**

இந்நகராட்சி பேருந்து நிலைய கடை உரிமதாரர் திரு. அ. பாண்டித்துரை என்பவர் தொடர்ந்த வழக்கு எண். A.S.(MD) No. 49/14-ற்கு உயர்நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடியமைக்குரிய வழக்கு கட்டணம் ரூ. 25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) திரு. கே. மகேந்திரன் வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 812/2023/அ1)

**தீர்மானம் எண்.532**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-9</u>**

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் அனைத்து பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதற்கு நகரின் 28 மையங்களை தேர்வு செய்து மாவட்ட ஆட்சியரின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி மையத்திற்கு தேவையான இருக்கை வசதி, மேஜை, நிழல்பந்தல், மின்வசதி, மின்விசிறி, குடிநீர் வசதி, விழிப்புணர்வு பேனர் போன்ற வசதிகள் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான செலவினம் கீழ்காணும் விபரப்படி மேற்கொண்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் விபரம் | செய்யப்பட்ட அடிப்படை வசதி விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | கே.செல்வம், பந்தல் அமைப்பாளர் | 28 மையங்களில் 05.08.2023 முதல் 11.08.2023 முடிய, 18.08.2023 முதல் 20.08.2023 முடிய சேர், டேபிள், பந்தல் அமைப்பதற்கு | 78910 |
| 2 | எம். பாண்டி பிரியா ரேடியோஸ் | 5.8.2023 முதல் 9.8.2023 முடிய சுவிட்ச் போர்டு டியூப் லைட், ஃபேன் வசதி மற்றும் ஆட்டோ விளம்பரம் | 31780 |
| 3 | ரவிக்குமார் | அனைத்து மையங்களும் குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. | 19490 |
| 4 | ரவிக்குமார் | கலைஞர் உரிமைத்திட்டம் விழிப்புணர்வு பேனர் 6 இடங்களில் வைக்கப்பட்டது | 15000 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 301/2023/அ1)

**தீர்மானம் எண்.533**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–10**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு LCV வாகன எண். TN 58 AS 3951–க்கு தகுதிச்சான்று 01.08.2023 அன்று புதுப்பிக்கப்பட்டது. மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க ஆன்லைன் கட்டணம் ரூ. 3500/– புகைச்சான்று ரூ. 200/– மற்றும் ஸ்டிக்கர் ரூ. 1500/– மொத்தம் ரூ. 5200/– திருமதி. எம். சசிகலா சுகாதார ஆய்வாளரால் செலவிடப்பட்டதற்கு செலவினத்தொகை ரூ. 5200/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 924/2020/எச்.1)

**தீர்மானம் எண்.534**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–11**

இந்நகராட்சியில் 15.08.2023 அன்று நடைபெற்ற 77–வது சுதந்திர தினவிழாவிற்கு தேவையான பொருட்கள் வாங்கியதற்கு ரூ. 2440/– ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், உசிலம்பட்டிக்கு மற்றும் மைக் செட் அமைத்ததற்கு ரூ. 1500/– தரணியா ரேடியோஸ் உசிலம்பட்டிக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 7273/2019/எச்.1)

**தீர்மானம் எண்.535**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–12**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு LCV வாகன எண். TN 58 AS 3893–க்கு தகுதிச்சான்று 01.08.2023 அன்று புதுப்பிக்கப்பட்டது. மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க ஆன்லைன் கட்டணம் ரூ. 3500/– புகைச்சான்று ரூ.200/– மற்றும் ஸ்டிக்கர் ரூ. 1500/– மொத்தம் ரூ. 5200/– திருமதி. எம். சசிகலா சுகாதார ஆய்வாளரால் செலவிடப்பட்டதற்கு செலவினத்தொகை ரூ. 5200/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 922/2020/எச்.1)

**தீர்மானம் எண்.536**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–13**

இந்நகராட்சியில் தூய்மை பணியாளர்களாக பணிபுரியும் திருமதி. அய்யம்மாள், திருமதி.தனலெட்சுமி, திரு. பழனி, திருமதி. ஜெயலெட்சுமி, திருமதி. பேச்சியம்மாள், திரு.வேளாங்கன்னி ஆகியோர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண்கள். W.P.(MD) No. 391 to 396/ 2016–இன் தீர்ப்புரை எதிர்த்து நகராட்சி சார்பாக மேல்முறையீடு செய்ததற்கு (W.A. (MD) S.R No. 25090 to 25095 / 2019) ஒரு வழக்கிற்கு ரூ.20000/– வீதம் 6 வழக்குகளுக்கு ரூ. 120000/– The Legal Aid services Authority, Madurai Bench of Madras High court, Madurai என்ற பெயரில் செலுத்த மாண்புமிகு சென்னை

உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு நாள் 05.07.2023 –இல் உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து மேற்படி தொகை ரூ.120000/– The Legal Aid services Authority, Madurai Bench of Madras High court, Madurai என்ற பெயரில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளைக்கு (வங்கி வரைவோலை எண் 423068 நாள் 17.07.2023) செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்படி தொகையை குறைத்து நிர்ணயம் செய்து வழங்க கோரி Consideration Affidavit நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதனடிப்படையில் தொகையினை குறைத்து ரூ.20000/– செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே வழங்கப்பட்ட வங்கி வரைவோலையை (வங்கி வரைவோலை எண் 423068 நாள் 17.07.2023) நகராட்சி வங்கி கணக்கில் வரவு வைத்து ரூ20000/– மட்டும் The Legal Aid services Authority, Madurai Bench of Madras High court, Madurai என்ற பெயரில் வங்கி வரைவோலையாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 12259/2019/சி1)

**தீர்மானம் எண்.537**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–14</u>

திரு. ஜி.வேல்முருகன், நகரமைப்பு ஆய்வர் (தற்போது திருமங்கலம் நகராட்சி) இந்நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் கள்ளர் கல்வி கழகத்திற்கு கட்டிட அனுமதி விதிகளை மீறி வழங்கியதற்கு தனியர் மீது தமிழ்நாடு நகராட்சி பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு விதிகள் 1970 8(2)–இன்கீழ் குற்றச்சாட்டுக்கள் பிறப்பிக்கப்பட்டு குற்றம் நிரூபணமானதால் இறுதி ஆணை 14.07.2023–இல் பிறப்பிக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். (வழக்கு எண். W.P.(MD) No. 20454/2023) மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பில் திரு. V. ஆஸ்டின் நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜராகவும், வழக்கிற்கு ஆகும் செலவினத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7273/2019/சி1)

**தீர்மானம் எண்.538**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–15</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN 58 AW 2747–க்கு பழுது நீக்கம் ஏற்பட்டு வாகனம் இயக்க முடியாத சூழ்நிலையில் இருந்ததால் பொதுப்பணி அவசர அவசியம் கருதி இந்நகராட்சி ஓட்டுநர் திரு. பா. சின்னச்சாமி அவர்களால் பழுது நீக்கம் மேற்கொள்ளப்பட்டதற்கான செலவினத்தொகை ரூ.14337/–ஆகும். மேற்படி செலவினத்தொகையை ஓட்டுநர் திரு. பா. சின்னச்சாமி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழுது பணி மேற்கொண்டதையும், தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2887/2013/எச்.)

**தீர்மானம் எண்.539**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–16**

மதுரை, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் தடை நீக்க கூட்டமர்வு படிவங்கள், பருவ வெளியீடு ஆகியவை கணினியில் தட்டச்சு செய்தமைக்கும், படி பெருக்கியில் (01.07.2023 முதல் 31.07.2023 வரை) நகல்கள் எடுத்ததற்கு ரூ. 13,000/–த்தை திரு. ஜி.மருதுபவானி என்பவருக்கு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2426/2019/பி1)

**தீர்மானம் எண்.540**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–17**

இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் CUG எண்களுக்கு 11.04.2022 முதல் 10.09.2023 வரை கட்டணத்தொகை கீழ்க்கண்ட விபரப்படி ஏர்டெல் நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 7397382171 | – ரூ. 4995 |
| 7397382172 | – ரூ. 4995 |
| | -------- |
| மொத்தம் | – ரூ. 9990 |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 131/2018/சி1)

**தீர்மானம் எண்.541**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–18**

முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தின்கீழ் நமது நகராட்சிக்குட்பட்ட அரசு கள்ளர் துவக்கப்பள்ளி, கருக்கட்டான்பட்டி, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் அரசு கள்ளர் துவக்கப்பள்ளி கவண்டன்பட்டி உள்ள பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு காலை உணவு வழங்குதல் திட்டத்திற்கான துவக்கவிழா 2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் நமது தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி மூலம் துவங்கி வைக்கப்பட உள்ளது. விழாவினை சிறப்பாக செயல்படுத்திட மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை அவர்களின் 21.08.2023 ஆம் தேதிய தலைமை செயலாளர், அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதனை தொடர்ந்து, மேற்படி திறப்பு விழாவிற்கு சாமியானா பந்தல், இருக்கை வசதி, மாணவ மாணவியர் அமர்ந்து சிற்றுண்டி உண்பதற்கு பந்தி பாய், தட்டு–80 எண்ணம் மற்றும் டம்ளர் 80 எண்ணளம், கூஜா 3 எண்ணம் தரமான குடிநீர் வழங்குவதற்கு RO பிளாண்ட் அமைக்கும் பணி, Flex பேனர்கள், திறப்பு விழாவினை காணொளி காட்சி நேரடியாக மூலம் காண்பதற்கு LED TV வசதி மற்றும் அமைத்து

ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமையபெற்றுள்ள வார்டு–14, கருக்கட்டான்பட்டி அரசு துவக்கப்பள்ளி மேடும் பள்ளமுமாக இருப்பதால் அதனை JCB கொண்டு சமன்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ. 2.00/– இலட்சத்திற்கு பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).நகர்மன்ற முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1504/2023/இ1)

**தீர்மானம் எண்.542**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–19</u>

உசிலம்பட்டி நகராட்சியில் மொத்தமுள்ள 24 வார்டுகளில் 10926 வீடுகள் மற்றும் வணிக பகுதிகளில் தினசரி சேகரமாகும் கழிவு நீர் ஆங்காங்கே வீடுகளுக்கு அருகில் கட்டப்பட்டுள்ள கழிவுநீர் தொட்டிகளில் சேகரம் செய்யப்பட்டு 3 தனியார் வாகனங்கள் மூலம் Septage Management Regularation முறையில் உரிமம் வழங்கப்பட்டு உரிய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தினசரி அகற்றப்பட்டு வருகிறது. இதனால் ஏற்படும் நிதியிழப்பினை சரிசெய்ய உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமாக ஒரு கழிவு நீர் வாகனம் கொள்முதல் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 9192/2022/SBM–1, நாள். 18.04.2023–ஆம் தேதிய தேதிய கடிதத்தில் தெரிவித்ததன் அடிப்படையில் உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்திலிருந்து கருத்துரு 09.05.2023–இல் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 9192/2022/SBM–1, நாள். 21.08.2023 மற்றும் 5–வது உயர்மட்டக்குழு ஆய்வுக்கூட்ட நடவடிக்கைகள் நாள். 26.06.2023–இல் SBM(U) 2.0 திட்டத்தின்கீழ் உசிலம்பட்டி நகராட்சிக்கு 1 எண்ணம் கழிவு நீர் உறிஞ்சு வாகனம் ரூ. 43.75/– இலட்ச மதிப்பீட்டில் (GOI–50% ரூ. 21.63/– இலட்சம் GOT–33% ரூ.14.27/– இலட்சம் ULB Share–17% ரூ. 7.35/– இலட்சம்) கொள்முதல் செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 726/2023/இ1)

**தீர்மானம் எண்.543**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–20</u>

உசிலம்பட்டி நகராட்சி தற்போதைய பேருந்து நிலையத்தினை மறுகட்டமைப்பு செய்வதற்கான பணிகள் மேற்கொள்வதகு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. இப்பேருந்து நிலைய கட்டுமான பணி காலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் பயணிக்கும் வகையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைத்திட தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அரசு குடியிருப்பு பகுதியில் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், ஆணையாளர் (ம) பொறியாளர் முன்னிலையில் இடம் தேர்வு செய்யப்பட்டது.

உசிலம்பட்டி நகர்ப்பகுதிக்கு தற்காலிக பேருந்து நிலையம் செயல்படுத்துவதற்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகள் கீழ்க்கண்ட விபரங்கள் அடிப்படையில் அமைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது.

1).தற்காலிக பேருந்து நிலையம் அமைய உள்ள பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் மற்றும் பேருந்திற்காக காத்திருக்கும் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணியர்களுக்கு பயணியர் நிழற்குடை, இரண்டு எண்ணம் அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.8.00/- இலட்சத்திற்கு பணி

2).பெண்கள் மற்றும் ஆண்கள் பொது கழிப்பறை (2 Seat) மற்றும் யூரினல் கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ. 5.00/- இலட்சத்திற்கு பணி

3). பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துநருக்கான Time Keeper Room மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ. 6.00/- இலட்சத்திற்கு பணிகளை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1613/2023/இ1)

**தீர்மானம் எண்.544**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-21</u>

உசிலம்பட்டி நகராட்சி அலுவலக கட்டிடத்தில் ஆணையாளர் மற்றும் பொறியாளருக்கென தனியாக கழிப்பறை வசதி இல்லாத காரணத்தினால் கழிப்பறை வசதி ஏற்படுத்தி தருவதற்கும் அலுவலக கட்டிடத்தில் மராமரத்து பணி பார்ப்பதற்கும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.5.00/- இலட்சத்தில் பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1608/2023/இ1)

**தீர்மானம் எண்.545**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-22</u>

உசிலம்பட்டி நகராட்சி மதுரை-தேனி பிரதான சாலை விரிவாக்க பணிகள் நெடுஞ்சாலை துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி விரிவாக்க பணிகளின்போது சாலையின் ஓரமாக அமைந்துள்ள உயர்மின் கோபுர விளக்குகளை கழற்றி வேறு ஒரு இடத்தில் பொருத்திட நகர்மன்ற அவர்களால் கோரிக்கைவிடப்பட்டதனை தொடர்ந்து தேனி பிரதான சாலையில் அமைந்துள்ள உயர்மின் கோபுர விளக்குகளை பாதுகாப்பாக கழற்றி வார்டு-24 கவண்டன்பட்டி மந்தை பகுதி மற்றும் வார்டு-4 எஸ்.ஓ.ஆர். நகர் பகுதியில் மறுமுறை பொருத்துவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.2.50/- இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மற்றும் பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1.மாமரத்துப்பட்டி நழைவு வாயில் அருகில்

2.நகராட்சி அலுவலகம் செல்லும் சாலை அருகில்

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1607/2023/இ1)

**தீர்மானம் எண்.546**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–23**

உசிலம்பட்டி நகராட்சியில் வார்டு–22 பகுதியில் அமைந்துள்ள MCC மற்றும் Crematorum அருகில் உள்ள காலியான இடத்தில் Bio Gas Plant 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் (2021–22) திட்டத்தின்கீழ் ரூ. 38.00/– இலட்ச மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் நல்லமுறையில் முடிவுற்றது. B io–Gas Plant–னை பாதுகாத்திட சுற்றி வேலி அமைத்தல், பேவர் பிளாக் தளம் அமைத்தல் மற்றும் Bio Methanation Plant–இல் உருவாகும் வாயுவினை (Gas) மின் சகதியாக (Light energy) ஆக மாற்றி MCC மற்றும் Crematorium –த்தில் பயன்படுத்திட Genget ஒரு எண்ணம் கொள்முதல் செய்வதற்கு ரூ.10.50/– இலட்சம் மதிப்பீட்டில் பணிகளை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2719/2022/இ1)

**தீர்மானம் எண்.547**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–24**

உசிலம்பட்டி நகராட்சியில் அலுவலக பின்புறம் உள்ள சுற்றுச்சுவரினை உயர்த்தி அமைத்தல் மற்றும் அலுவலகத்திற்கு பின்புறம் உள்ள அறையினை மராமத்து பார்க்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ. 5.00/– இலட்சத்தில் பணிகளை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1609/2023/இ1)

**தீர்மானம் எண்.548**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–25**

உசிலம்பட்டி நகராட்சியில் 2022–2023–ஆம் ஆண்டிற்கான திட்ட நிதியில் தேர்வு செய்யப்பட்ட கீழ்க்கண்ட சாலைப்பணிகளில் தேர்வு செய்யப்பட்ட சாலையின் பெயர்கள் UTIS மென்பொருளில் தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டதனை சரிசெய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பிடவும், கீழ்க்கண்ட விவரப்படி அசல் சாலைப்பெயரிலேயே பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | தேர்வு செய்யப்பட்ட சாலைப்பணியின் பெயர் | UTIS–இல் மாற்றம் செய்ய வேண்டியது. |
|---|---|---|---|
| 1 | TURIP (2022–23) | சன்னாசித்தேவர் தெரு | V.M. தெரு |
| 2 | NSMT P–II (2022–23) | V.M.தெரு | சன்னாசித்தேவர் தெரு |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 513/2023/இ1)

**தீர்மானம் எண்.549**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–26**

உசிலம்பட்டி நகராட்சியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் Phase–II 2022–23–ஆம் ஆண்டின்கீழ் ரூ. 542.00/– இலட்சத்தில் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் 22.06.2023–இல் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கான விளம்பரக்கட்டணம் ரூ. 90562.00/– (ரூபாய் தொன்னூராயிரத்து ஐநூற்று அருபத்து இரண்டு மட்டும்) Bright Advertising Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 513/2023/இ1)

**தீர்மானம் எண்.550**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–27**

உசிலம்பட்டி நகராட்சி தேனி –மதுரை நெடுஞ்சாலையில் சாலை விரிவாக்க பணிகள் நெடுஞ்சாலை துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேற்படி சாலைப்பணி மேற்கொள்ளும்போது குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் சேதமடைவதால் உசிலம்பட்டி நகராட்சி பொது மக்களுக்கு சரியான நேரத்தில் குடிநீர் விநியோகம் செய்வதில் தடை ஏற்படுகிறது. எனவே நெடுஞ்சாலையில் உள்ள பகிர்மான குடிநீர் விநியோக குழாயினை நகராட்சி பகுதியில் மாற்றம் செய்யும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ7.00/– இலட்சத்தில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1672/2023/இ1)

**தீர்மானம் எண்.551**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–28**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–01 இருளாயி நகர் பகுதி பொது மக்களின் கோரிக்கையிணங்க காளவாசல் அருகில் அமைந்துள்ள ரூ. 2.00/– இலட்சம் கொள்ளளவு கொண்ட உயர்மட்ட நீர்தேக்க தொட்டியிலிருந்து பகிர்மான குடிநீர் குழாய் (Distribution Pipelline) அமைத்திடும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ. 1.25/–இலட்சத்தில் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1672/2023/இ1)

**தீர்மானம் எண்.552**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–29**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–12 பேருந்து நிலையம் அருகில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் திருமகனார் சிலை அமைந்துள்ளது. வரும் 30.10.2023 அன்று

நடைபெறவுள்ள தேவர் ஜெயந்தியை முன்னிட்டு தேவர் சிலையினை புதுப்பிக்க அலங்கார விளக்குகள் அமைத்தல், வர்ணம் பூசுதம் மற்றும் நீர் ஊற்றை சரிசெய்ய போன்ற பணிகளுக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 1.50/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1670/2023/இ1)

**தீர்மானம் எண்.553**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-30</u>

உசிலம்பட்டி நகராட்சி பொறியியல் பிரிவு பணிகளான விரிவான திட்ட பிரேரனை தயார் செய்வதற்கு புகைப்படங்கள் மற்றும் Drawing , Colour Print out மற்றும் பொறியியல் பிரிவு திட்ட பணிகளுக்கு தேவையான Print out -கள் எடுப்பதற்கு Colour Printer -1 எண்ணம் தேவைப்படுகிறது,மேற்படி Colour Printer -யை உத்தேச மாக ரூ.90,000.00/- மதிப்பீட்டில் பொது நிதியில் கொள்முதல் செய்திட நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1671 /2023/இ1)

**தீர்மானம் எண்.554**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-31</u>

உசிலம்பட்டி நகராட்சியில் வார்டு -17 கனரா பேங்க் தெருவில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாடு திட்டம் (2022-2023) பணிகள் நடைபெற்றுவருகிறது.. சாலை பணிகள் மேற்கொள்ளும் போது மேற்படி தெருவில் பழைய மழைநீர் வடிகால் வாய்க்கால்களை மாற்றி புதிய மழைநீர் வடிகால் கட்டுவதற்கு நகர் மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கனரா பேங்க் தெருவில் மழைநீர் வடிகால் வாய்க்கால் கட்டுவதற்கு ரூ. 2.30 /- ல் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டமைக்கு பணியினை பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திட்ட பணியின் அவசர அவசியம் கருதி பணியினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
3. பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 2080 /2022/இ1)

**தீர்மானம் எண்.555**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்-32</u>

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி சார்ந்த அனைத்து பணிகளை அச்சு எடுக்கும் பணிகளுக்கு நான்கு எண்ணம் HP Laser Jet MFP M436dn Laser Printer

பயன்பாட்டிலிருநது இருந்து வருகிறது. தற்போது மேற்படி பிரிண்டர்களுக்கான டோனர் தீரும் நிலையில் இருப்பதால் உடன் 12 எண்ணம் (Model 56x) டோனர் Cartridge கொள்முதல் செய்யும் பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான தோராய செலவினம் ரூ.1,20,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1469/2023/இ1)

**தீர்மானம் எண்.556**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்-33**

உசிலம்பட்டி நகராட்சி, கலைஞர் நூற்றாண்டு விழா (கலைஞர் நூலக கட்டிடத்தை திறந்து வைக்க) நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் கீழ்க்கண்ட விபரப்படி அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1.மாலை மலர் - ரூ. 9975.00

2.மாலை தமிழகம் - ரூ. 15,330.00

3. Evening Tamilnadu - ரூ. 15,540.00

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1351/2023/இ1)

**தீர்மானம் எண்.557**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்-34**

உசிலம்பட்டி நகராட்சியின் மொத்த பரப்பளவு 13.85 Sq.m.-இல் 1 முதல் 24 வார்டுகளை உள்ளடக்கிய பகுதிகளில் மழைநீர் வடிகால் வாய்க்கால்கள் இல்லாமல் மழைநீர் சாலை மற்றும் தெரு பகுதிகளில் தேங்கி பொது சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, உசிலம்பட்டி நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் சீராக வடிந்தோடும் வண்ணம் வழிதடங்கள் உள்ள பகுதிகளை (Disposal Point) -னை கண்டறிந்து உள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைத்திடவும், கட்டிடங்கள் குடிநீர் குழாய்கள் நீர்நிலைகள், சாலைகள், பூங்காக்கள், தெருவிளக்கு உள்ள பகுதிகளை கண்டறியவும் சர்வே பணி, வார்டு வரையறைக்கான எல்லைகளை துல்லியமாக கண்கிடவும் மற்றும் Geo Tagging image-களை ட்ரோன் கேமரா மூலம் Survey பணிகளை கீழ்க்கண்ட விபரப்படி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. (DGPS) சர்வே பெஞ்ச்மார்க் மற்றும் டிலிமிடேஷன் வார்டு எல்லைகளை துல்லியமாக அளவீடு செய்வதற்கும்
2. ட்ரோன் சர்வே மூலம் 5 செ.மீ. அல்லது சிறப்பு தெளிவுத்திறன் கொண்ட படங்களின் ஜியோ டேக்கிங், பதிவு கோப்புகள் மற்றும் தரமான படங்கள் எடுக்கும் பணி
3. Preparation Orthomosaic images Digital Elevation Model மற்றும் DSM
4. Feature Extraction பில்டிங் Foot Prints சாலைகள், பாலம், பூங்காக்கள், நீர்நிலைகள், மின் கம்பங்கள், தெரு விளக்குகள் திறந்தவெளி வடிகால் நில பயன்பாட்டு நிலப்பரப்பு, அரசு கட்டிடங்கள் உள்கட்டமைப்புகள் துல்லியமாக அளவீடு செய்து ஆவன படுத்தும் பணி
5. Contour Map எடுக்கும் பணி

போன்ற பணிகளை தனியார் நிறுவனத்தினர் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 17,00,000/– மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொதுநிதியின் இருப்பினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1673/2023/இ1)

**தீர்மானம் எண்.558**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–35</u>

உசிலம்பட்டி நகராட்சிக்கான பிரத்யேக குடிநீர் திட்டம் 25.05.2023 அன்று மாண்புமிகு தமிழக அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) அவர்களால் பயனுக்கு கொண்டு வரப்பட்டு தற்போது சோதனை ஓட்டத்தில் உள்ளது.

தற்போது இக்குடிநீர் திட்டத்தின் அடிப்படையில் நகராட்சிக்கு நாளொன்றுக்கு சுமார் 4.50 MLD சுத்திகரிக்கப்பட்ட பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சோதனை ஓட்ட காலத்தில் விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவு நாளுக்கு நாள் மாறுபடும் என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கான மொத்த நிதியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி குழுமம் (IUDM) மூலம் கடன் மற்றும் மானியத்தொகை ரூ. 7303.00/– இலட்சமும், பராமரிப்பிற்கு நகராட்சி நிதி ரூ. 130.00/– இலட்சம் ஆக மொத்தம் ரூ. 7433.00/– இலட்ச மதிப்பீடு ஆகும். இதில் இத்திட்டத்திற்கான ஒரு ஆண்டிற்கான பராமரிப்பு மற்றும் இயக்குதல் செலவினத்தொகை ரூ.130.00/– இலட்சத்தினை கொண்டு ஒப்பந்ததாரரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இதன்படி ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவினத்தொகை ரூ.10.83/– இலட்சம் ஆகும் என நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மதுரை அவர்களின் கடித எண். 2507/கோ.உசிலம்பட்டி பி.கு.தி./இநிவ/2023, நாள். 29.08.2023 தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | செலவினத்தொகை விபரம் | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | பணியாளர் சம்பளம் | 1.31 |
| 2 | வேதிபொருட்கள் கொள்முதல் | 0.81 |
| 3 | மின்கட்டணம் | 7.97 |
| 4 | சரக்கு (ம) சேவைவரி LWF மற்றும் இதர செலவுகள் | 0.74 |
| | மொத்தம் | 10.83 |

மேற்கண்ட விவரப்படி பராமரிப்புத்தொகையாக நகராட்சி பங்களிப்பு தொகையிலிருந்து ரூ.10.83/– இலட்சத்தினை சோதனை ஓட்ட காலத்திலேயே தமிழ்நாடு வடிகால் வாரியத்தினருக்கு வழங்கிட நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1857/2018/இ1)

**தீர்மானம் எண்.559**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர்,
உசிலம்பட்டி நகராட்சி.